# போர்வாள்

"போர்வாள்"

சந்தா விபரம்

| | | |
|---|---|---|
| ஓராண்டு | ரூ. | 5 0 0 |
| 6 மாதம் | ரூ. | 2 8 0 |
| தனிப்பிரதி | | 0 1 6 |

ஆசிரியர்கள் : காஞ்சி. மணிமொழியார்
டா. இளஞ்செழியன், B.A (Hons)

திராவிடர் வாரத்தாள்

தனி இதழ் அணா 1½
வெளிநாடு அணா 2

வாள் 3 | சென்னை, திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 1 — 14—1—50 சனிக்கிழமை | வீச்சு 20


# சொற்கள்! சொற்கள்! வெறும் சொற்கள்!

"ஆதாரக் கல்வி என்பது என்ன?' என்பதைச் சரியாக அறிந்தவர் இந்தியாவில் ஒரே ஒ வர்தான் இருந்தார். அந்த மகாபுருஷர் காலமாகிவிட்டார்!"

"அடுத்தப்படியாக 'ஆதாரக் கல்வியைப் பற்றி அறிந்தவர்கள் இப்போது இந்தியாவில் ஐந்தாறு பேர் உண்டு. ஆனால் அவர்கள் ஒவ்வொருவரும் 'ஆதாரக் க்ல்விக்குச் சொல்லும் வியாக்யானம் ஒவ்வொரு விதமாக இருக்கும்!"

:—'கல்கி'

"ஆதாரக் கல்வியைக் குறித்து நான் கொண்டிருக்கும் கருத்தை வெளியிடுவதற்காக ஒருவரும் கோபப் படக் கூடாது. நான் காண நேர்ந்த ஆதாரக் கல்வி ஆசிரியர்களால் நான் மிகமிக ஏமாற்றம் அடைந்துவிட்டேன். ஆதாரக் கல்வியைப் போதிக்கும் ஆசிரியர்களுக்கான புத்தகங்களையோ மாணவர்களுக்கான புத்தகங்களையோ நான் இதுவரையில் கண்டதே இல்லை."

:—ஆசப் அலி

இந்தியத் துணைக் கண்டத்திற்குப் யநிலை பிறந்திருக்கிறது. ஏறத் ழ முப்பது திங்கள் சென்று டன, ஏகாதிபத்திய இருள் ன்று சுதந்திரச்சூரியன் ஒளி ஆரம்பித்து! ஆட்சிப் பீடத்தில் ர்ந்திருப்பவர்களோ, சாதாரண நபர்கள் அல்ல; அசகாய சூரர்கள்; மக்கள் மனத்தைக் கவர்ந்துள்ள தியாகத் தழும்பேறிய திருக்கல்யாண குணம் நிரம்பியவர்கள்!

ஏற்பட்டுள்ள புதியநிலை, ஏதாவது புதிய மாற்றத்தை, முற்போக்கான புதியவாழ்வை அளித்துள்ளதா என்றால், இல்லை, முக்காலும் இல்லை என்பதை ஐயத்திற்குத் துளியும் இடமில்லாமல் ஆணித்தரமாகக் கூறவேண்டி இருக்கிறது. உருவான செயல்களைத்தான் சுட்டிக் காட்டுவதற்கு இடமில்லாமல் இருக்கிறதேயன்றி, விளம்பரக் கண்காட்சிகள் அதாவது மந்திரிகள் மாநாடுகள், நிபுணர்கள் ஆலோசனைகள், காரசாரமான விவாதங்கள், அருமைபெருமையான ஏட்டுதிட்டங்கள், நீளநீளமான அறிக்கைகள், ஆகிய எவற்றிற்கும், இந்த இரண்டரை ஆண்டுகளில் ஒரு நாளேனும் பஞ்சம் ஏற்பட்டதே கிடையாது. இருநூறு ஆண்டு ஏகாதிபத்திய ஆட்சியில் நிகழ்ந்துள்ள இது போன்ற சம்பவங்களை, இன்றைய ஆட்சியினர் நடவடிக்கைகளோடு ஒப்பிட்டுப்பார்த்தால், உண்மையிலேயே ஆங்கிலேயர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டியவர்களாவர்; அந்த அளவிற்கு நாட்டு முன்னேற்றத்திற்கு சொற்களால் கோட்டைகள் அமைத்துள்ளனர் மெது அமைச்சர்கள்!

ஆங்கிலேயர்கள் செய்து விட்டுப் போன எந்த ஒரு நல்ல காரியமும், இந்தச் சுயராஜ்யக்குடிலர்கள் பார்வையிலிருந்து தப்பிப்பிழைத்தது கிடையாது. இவர்கள் தொட்டதெல்லாம் அடைகிறது நாசம். ஒன்றாவது நல்ல முறையில் அமைவது கிடையாது. நல்ல முறையில் அமையாமற்போனாலும் பாதகமில்லை, முன்பிருந்த நலம் பயக்கும் சீரும் குலைந்து விடுகிறது. ஆனால் ஆங்கிலேயர் அமைத்துத்தந்த இராணுவ முறை, போலீஸ் அமைப்பு, நாட்டு நிர்வாக ஏற்பாடு ஆகியவற்றில் பட்டும் நமது நல்லமைச்சர்கள் தங்கள் கைவரிசையைக்காட்டுவது கிடையாது. இத்துறைகளில் மிகமிகத் தாராளமாகச் செலவு செய்கிறார்கள். ஒன்றுக்குப்பலவாக வாரி இறைக்கிறார்கள். ஏகாதிபத்யம் எந்த நோக்கத்தோடு, இந்த அமைப்புகளைப் பலம் பொருந்தியனவாக ஏற்படுத்தியதோ, ஏவிவந்ததோ, அதே நோக்கத்தோடுதான் இந்தச் சுதந்திர செம்மல்களும் நடந்து வருகிறார்கள். மக்களின் உரிமைகளைப் பறிப்பதற்காக எந்தெந்தவகையில் அடக்குமுறைச் சட்டங்களை ஏகாதிபத்யம் பிரயோகித்து வந்ததோ, அதனையும் மிஞ்சும் முறையில் நமது அகிம்சாவீரர்கள் நடந்து கொண்டு நற்புகழ் பெறுகிறார்கள்!

ஆங்கில ஏகாதிபத்யத்தால் ஏதாவது இத்துணைக் கண்டத்திற்கு நன்மை ஏற்பட்டிருக்கிறது என்று சொல்வதானால், ஆங்கிலேயர்கள் இங்கு புகுத்தி வளர்த்துவந்த கல்விப் பயிற்சி ஒன்றே ஒன்றினால் தான் என்று துளியும் தயக்கம் காட்டாமல் கூறி விடலாம். ஆங்கிலேயர்கள் எந்த நோக்கத்தோடு அவர்களுடைய கல்விமுறையை, இந்த நாட்டில் புகுத்தியிருந்த போதிலும், அதன் பயனாக இந்த நாட்டு மக்களுக்கு ஏற்பட்ட-ஏற்பட்டு வருகிற நல்ல விளைவுகளை ஒருவராலும் மறுத்துக் கூறிவிட முடியாது. வைதீகப் பிடியில் சிக்குண்டு, சிந்திக்கும் திறனிழந்து, மிருக நிலையில் கிடந்துழன்று, இந்நிலையே உயர் நிலை என்று எண்ணிக்கிடந்த இந்த நாட்டு மக்களை, நீண்ட கால உறக்கத்திலிருந்து தட்டி எழுப்பியது ஆங்கிலேயர்கள் புகுத்திய கல்வி முறைதான் என்று கூறுவது மிகைபடக்கூறியது ஆகாது. சாக்கடை போல் தேங்கிக்கிடந்த சிந்தனா சக்தியை மீண்டும் நிரம்பச் செயலாற்றத்தூண்டியது இந்தக் கல்வி முறைதான். மனிதனாகப் பிறந்த அனைவரும் சமம் என்றச் சமத்துவ உணர்ச்சியைக் கொடுத்ததும் இந்தக் கல்விதான். ஆங்கிலேயர் ஆளவும், அவர் ஏவிய வழி இந்த நாட்டு மக்கள் ஆடிக்கொண்டிருப்பதும், அக்கிரமம், அந்த ஆண்டான் அடிமைத்தளையை அறுத்தெறிய வேண்டும் என்ற உரிமைக் கனலை மூட்டி விட்டதும் இந்தக் கல்விதான். பொய் மலிந்த இதிகாச புராணங்களால் பலமாக மூடப்பட்டிருந்த நமது கண்களுக்கு, முற்போக்கான கோட்பாடுகளைக் கொண்டவளர்ந்து வரும் மனிதவரலாற்றுச் சுவடிகளைக் காணும் வாய்ப்பினை, இந்தக் கல்விதான் அளித்தது—அளித்துக் கொண்டும் வருகிறது. அதிகம் கூறுவானேன்? இந்தக்கல்வி, நாம் பலநூறு ஆண்டுகளாக மறந்துபோயிருந்ததும், மீண்டும் பெறவேண்டும் என்ற எண்ணமே எழாமல் இருந்ததுமான நமது மனித மேம்பாட்டை நமது கண்முன் கொண்டுவந்து நிறுத்திக் காட்டியது—அதனை நாம் பெறுவதற்கான வழிவகைகளை நமக்குத் திட்டவட்டமாகச் சுட்டிக் காட்டியது.

இந்தக் கல்வி முறையிலே குறைகளே கிடையாதா? எப்படி இல்லாமல் இருக்க முடியும்? குறைகளைக் கண்டாராய்ந்து, திருத்தம் செய்யப்படவேண்டியதைத் திருத்தியும், அறவே அகற்றப்படவேண்டியதை அகற்றியும், மூலத்திற்கு மோசம் ஏற்படாமல், நல்ல முறையில் கல்விப் பயிற்சியை நமது மக்களுக்கு அளிக்க முனைவதுதான் முறையாகும். மூட்டைப்பூச்சிக்குப் பயந்து, குடியிருக்கும் வீட்டையே கொளுத்த முற்படுபவன் அறிவாளிகள் பட்டியில் சேர்ப்பதற்குத் தகுதியற்றவனேயாவான்.

சிறைச்சாலை ஒரு பயிற்சிக் கூடமல்ல, கல்வித் துறையில் இருப்பதாகச் சொல்லப்படும் குறைபாடுகளை நேர்செய்வதற்கு. போலீஸ் குண்டாந்தடியும் ஒரு மந்திரக் கோலல்ல, அதற்கான அறிவை அளிக்க! தக்ளி கைராட்டை எதற்கும் அதற்கான போதனைதரும் ஆற்றல் கிடையாது. எனவே எப்படியோ கிடைத்த சுதந்திரத்தை, ஏதன் பெயரையோ கூறி அரியாசனத்தில் அமர்ந்திருப்பவர்கள், ஆங்கிலேயர்கள் விட்டுச் சென்ற கல்வி முறையிலும், 'தேசியப் பண்பாட்டிற்கு' ஏற்ற சீர் செய்யபோகிறோம் என்று கிளம்பி இருப்பது, விரும்பக் கூடியதுமல்ல—வரவேற்கக் கூடியதுமல்ல — வன்மையாகக் கண்டிக்காமல் இருக்கக் கூடியதுமல்ல.

'ஆதாரக் கல்வியாம் ஆதாரக் கல்வி!' இதற்கான விளக்கம் உண்டா? விளங்கிக் கொண்டவர்கள்தான் உண்டா?

"ஒருவர்தான் இருந்தாராம்! அவரும் இறந்து விட்டாராம்!!" இவ்வாறு கூறுவது நாம் அல்ல—நாம் தான் குறைபட்டவர்களாயிற்றே—ஆளவந்தார்கள் செய்யும் அனைத்திற்கும் சொட்டுச் சொல்லுபவர்கள் இவர்கள்—என்ற பழிச்சொல் சுமையைத் தாங்கிக்கொண்டு இருப்பவர்களாயிற்றே! 'கல்கி' ஏட்டிலே, 'ரா. கி' கூறுகிறார் இவ்வாறு, 7-8-49-ல்! 'கடவுள்' என்ற கற்பனைவார்த்தைக்குக்கூட, விளங்கிக் கொண்டவர் போல விளக்கம் கூறிவிடலாம்போல் இருக்கிறது. இந்த 'ஆதாரக் கல்வி'க்கு அது ஒன்றும் முடிவதாகக் காணோம். 'ஆதாரக் கல்வி' என்ன என்றால், 'அடிப்படைக் கல்வி' என்று வேறு ஒரு சொல்லைக் காட்டுகிறார்கள். அப்படி என்றால், 'ஜீவாதாரக் கல்வி' என்கிறார்கள். அதற்கும் விளக்கம் கேட்டால், 'குதர்க்கவாதி' என்று கூசாமல் கூறிவிடுகிறார்கள்! தங்களையும் ஏமாற்றிக்கொண்டு மற்றவர்களையும் ஏமாற்றுகிறோமே என்பதை மறந்து நாடாள வந்தவர்கள், நமது வாயை மூட இந்த உருட்டல் மிரட்டல்களைக் கையாளுகிறார்கள்.

'ஆதாரக் கல்வி' என்ன என்பதைத் தாங்களும் புரிந்துகொண்டு, அறிந்துகொள்ள ஆசைப்படும் நம் போன்றவர்களுக்கும் புரியவைக்க முனைவதுதான் பொறுப்புணர்ந்தவர்கள் செயல் என்பதை இந்த ஆளவந்தார்கள் உணரப் போகிறார்களோ, அல்லது பொதுமக்கள் தான் 'போதும் உல்லாச புரியினரே! இறங்குங்கள் கீழே!' என்று கூறி அவர்களுக்கு ஏற்ற இடத்தைக் காட்டப் போகிறார்களோ நாம் அறியோம்.

இதனைத் தெரிந்தவர் மறைந்து விட்டார் என்பதோடும் ரா. கி. யார் நின்று விடவில்லை. இப்பொழுதும்.

இதுபற்றித் தெரிந்தவர்கள் ஐந்தாறு பேர் இருக்கிறார்களாம், ஆனால் அவர்களோ வெவ்வேறு விளக்கம் கூறுபவர்களாம்! 'ஆதாரக் கல்வி' பற்றி அறிந்திருக்கிறவர்களின் விஷய ஞானத்தை சித்தரித்துக் காட்டுகிறார் ரா. கி. யார் இந்த முறையில். இத்துடனும் ரா.கி.யார் நிற்கவில்லை. 'ஆதாரக் கல்வி'யை, எப்படியும் அமுல் நடத்தியே தீருவோம் என்று அடம் பிடிப்பவர்களையும் படம்பிடித்துக் காட்ட ரா. கி. யார் தவறிவிடவில்லை. இதோ,

“காந்தி மகாத்மாவின் வாழ்க்கையில் ஒரு பெரிய விசேஷம் என்னவென்றால், தாம் கடைப்பிடிக்கும் கொள்கையை மாற்றிக் கொள்ளத் தயங்குவதில்லை. சோதனையில் நேற்றுச சரி என்று தோன்றியது இன்று பிசகு என்று ஏற்பட்டால் உடனே மாற்றிக் கொள்வார்.!!

“ஆனால் காந்தி மடத்தின் சீடர்கள் அப்படியெல்லாம் மாற்றிக்கொள்ள மாட்டார்கள். அவர்கள் பிடித்தால் ஒருபிடிதான். ஆதாரக் கல்வி முறைச் சோதனையில் ஒரு சிறுவன் செத்துப் போய்விடுவதாக இருந்தாலும், அதனால் பாதகமில்லை, கடமையைச் செய்து விட்டுச் சாகட்டும்; வீர சொர்க்கம் அடையட்டும்!” என்பார்கள் புண்ணியவான்கள்!

'புண்ணியவான்கள்! யார்? குரு காட்டிய வழியைத் தட்டி நடப்பவர்கள் — சிறுவன் செத்துப் போவதாக இருந்தாலும், மூர்க்கத்தனமாகத் தவறைச் செய்தே தீருவதென்று தீர்மானித்துக் கொண்டு நடக்கும் ஆளவந்தார்கள் — புண்ணியவான்கள்! ரா. கி. யார் தரும் அடைமொழி இது! அருமையான படப்பிடிப்பு!

'ஆதாரக் கல்வி'யைப் புகுத்த இந்த ஆளவந்தார்கள் அடம்பிடிப்பது ஒருபக்கம் இருக்கட்டும்; குருவுக்கே துரோகம் செய்வதும் இருக்கட்டும்; சிறுவர்கள் எண் எழுத்துக் கற்பதும் குட்டிச் சுவராவதும் இருக்கட்டும்; இந்த ஆதாரக்கல்வி போதிக்கும் பள்ளிகளில் சிறுவர்கள் எவ்வளவு சந்தோஷமாகக் கற்கிறார்கள் என்பதைப்பாருங்கள். இதற்கும் ரா. கி. யார் விளக்கம் தருகிறார். அது, இதோ.

“இப்போது ஆதாரக் கல்வியை நடத்திவைக்கும் சிலஸ்தாபனங்களில் பிள்ளைகளைக் காலை முதல் மாலைவரை வாட்டி எடுக்கிறார்கள்! குழந்தைகளின் வாழ்க்கையில் ஆனந்தமே இல்லாமல் செய்து விடுகிறார்கள்”

ஆதாரக் கல்விக் கூடம், குழந்தைகளின் ஆனந்தத்தை அழிக்கும் அடிமைக் கூடமாகிறது. கலைக் கூடம் கொலைக் கூடமாக மாறுகிறது. 'வாட்டி எடுக்கிறார்கள் பிள்ளைகளை!' அதுவும் காலை முதல் மாலை வரை!

ஆளவந்தார்களின் அரும் பெரும் செயல்களைப்பற்றிக் கண்காணித்து, தவறு செய்கின்ற வேளைகளில் கண்டித்துத் திருத்தவேண்டுமே என்ற கவலையற்று இருக்கும் நாட்டு மக்களுக்கு — நல்லறிவாளர்களுக்கு இதனை அர்ப்பணம் செய்கிறோம். குறிப்பாகத் தங்கள் செல்வச் சிறுவர்களைப் பள்ளிக்கனுப்பும்நிலையில் உள்ள பெற்றோர்கள் இதனைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டுகிறோம். அமைச்சர்கள் அமுல் நடத்தும், ஆதாரக் கல்வி என்னும் ஆகாத திட்டத்தால், தங்கள் தங்கள் சிறார்கள் காலை முதல் மாலைவரை வாட்டி வதைக்கப்படுவதை, குழந்தைகளின் பெற்றோர்கள் உணரநேர்ந்தால், அவர்கள் நெஞ்சம் என்ன பாடுபடாது? ஆதாரக் கல்வியின் உண்மையை உணரட்டும்—ஊராள வந்தவர்களுக்கு நல்லறிவு கொளுத்தட்டும் அமைதியான முறையில் தமிழ்நாட்டுப் பெற்றோர்கள்.

திராவிட முன்னேற்றக்கழகத்தின் உறுப்பினர் பட்டியிலே ரா. கி. யார் பெயர் கிடையாது. அவர் ஒரு காங்கிரசார். தியாகத் தழும்பைத் தமது உடலில் தாங்கியுள்ளவர். சிறந்த தமிழ் எழுத்தாளர்களிலே அவரும் ஒருவர். கல்கிபத்திரிகையின் ஆசிரியர். கவர்னர் ஜெனரல் சி. ஆரின் அத்தியந்த நண்பர். அவர் கூறுகிறார் ஆதாரக் கல்வியின் அர்த்தமற்ற நிலையை.

மற்றொருவர் சனம் ஆசப் அலி, ஒரிசா கவர்னர், அவரும் கூறுகிறார், இதுபற்றிய தமது கருத்தை கண்டனத்தைக் கிளப்புமே என்ற அச்சத்தோடு கூறுகிறார்,

ஆதாரக்கல்வியில் பயிற்சி பெற ஆசிரியர்களுக்கும் நல்ல நூற்கள் கிடையாது; மாணவர்களுக்குப் போதிக்கவும் நூற்கள் கிடையாது என்று. இது மட்டும் அல்ல ஆதாரக்கல்வி ஆசிரியர்கள் கனம் ஆசப் அலிக்கு பெரும் ஏமாற்றத்தை வேறு கொடுத்து விட்டு இருக்கிறார்கள். கனம் ஆசப் அலியோ காங்கிரஸ் மேலிடத்தின் அன்பிற்குப் பாத்திரமானவர். பல நாள் காங்கிரஸ்காரர்! ஒரு சிறந்த எழுத்தாளர் கண்டிக்கிறார்! ஒரு காங்ரஸ் கவர்னர் கண்ணீர் விடுகிறார் கண்டனத்துக்கு மனம் இளகவில்லையானாலும் கண்ணீருக்காவது மனம் உளகுமா என்றால், அந்தத் தியகுணத்தைத்தான் ஆட்சிப் பீடத்தில் அமருவதற்கு முன்பே நமது ஆளவந்தார்கள் தங்களிடமிருந்து அகற்றி விட்டார்களே!

இப்படியெல்லாம் அனைவரையும் திணறடித்துத் திக்குமுக்காடச் செய்கிற, ஆதாரக் கல்வி எதுவாகத்தான் இருக்க முடியும் என்று பார்ப்போம். சிறுவர்கள் பள்ளிக்குச் செல்லும் பக்குவ வயது வந்த உடனே, கண்பார்க்க, மூளை இயங்க, கைசெய்யப் பயிற்சிப் பெறுவதுதான் இந்த ஆதாரக் கல்வியின் அடிப்படை இலட்சியமாம். தொழில் செய்யும் நோக்கத்தை சிறு பிராயத்திலிருந்தே குழந்தைகளுக்குப் பயிற்றுவித்து விடுவது என்பதுதான் இந்த ஆதாரக்கல்வியின் சாராம்சம். இந்தக் கோட்பாடு பாரதமாதாவிற்கு மட்டும் பிதிரார்ஜிதச் சொத்தல்ல. இத்துறையில் உரிமை கொண்டாட எல்லாநாடுகளாலும் முடியும். இயந்திர நாகரிகம் விரிவடைவதற்கு முன்னால், குடும்பம் குடும்பமாகச் சிறு சிறு கருவிகளின் உதவியால் ஏதாவது தொழில் செய்துதான் வாழ்ந்துவந்தனர் மக்கள். எடுத்துக்காட்டாக நெசவுத்தொழிலில், இன்றும் குடும்பம் பூராவும் ஈடுபட்டு வேலைசெய்வதை எல்லாஊர்களிலும் காணலாம். குழந்தைப்பருவம் நீங்கின உடனே குடும்பத்தொழிலை மேற்கொள்ளாத சிறுவர்களைக் காண்பது மிக மிக அருமை. இயந்திரம் வளரவே, இந்தக்கைத்தொழில்கள் நசிக்கத்தொடங்கின. இது இயற்கையேயாகும். இதன்ப

கச்சிறுவயதிலேயே ஏதாவது குடும்பத்தொழில் பயிற்சி பெறுவதும் நசித்தது. இதனை மீண்டும் உயிர்ப்பிப்பதுதான் ஆதாரக்கல்வியின் மூல நோக்கம். எழும் பரிதியை முறம் கொண்டு மறைத்து விட முயலுவதிலும் இது பொருத்தமற்றதாகும். எனவே இன்றைய சூழ்நிலையில், இந்த ஆதாரக்கல்விக்கு அவசியமும் இல்லை, உருவாகி வளர்ந்து நல்ல பயனைக் கொடுப்பதற்கான சக்தி அதற்கு இல்லவும் இல்லை.

பதினன்கு வயதிற்குட்பட்ட சிறுவர்களை, பலசரக்குக்கடைகளில் எடுபிடிகளாகக்கூட வேலைக்கு அமர்த்திக்கொள்ளக் கூடாது என்று சட்டமியற்றும் சர்க்கார் நடைபெறும் காலத்தில், இந்த உயர்ந்த கருத்துக்கு எதிராக உள்ள, உடலுழைப்பால் பாடுபடுவதின் மூலம் கல்வி கற்க ஏற்பாடு செய்வது என்பது கொஞ்சமும் பொருத்தமுடையது ஆகாது. ஆதலாலே, இந்த ஆதாரக்கல்வி முறையை உடனடியாகத் தொலைத்துத் தலைமுழுக வேண்டியது ஆளவந்தார்களின் நீங்காக் கடமையாகும்.

இந்த உதவாக்கரை படிப்பிற்காக ஒவ்வொரு மாகாண சர்க்கார்களும் செலவு செய்வது ஒருபக்கம் இருக்க, டில்லிதேவதைகள் இதுபற்றிச் சண்டப்பிரசண்டம் செய்வது கொஞ்சநஞ்சம் அல்ல. போட்டிருக்கிறதையா மத்திய சர்க்கார் ஒரு திட்டம், இத் துணைக் கண்டம் முழுதும் அத்திட்டம் நிறைவேற நாற்பது ஆண்டுகள் பிடிக்குமாம். அதற்காகும் செலவு 8000 கோடி ரூபாயாம். ஆண்டு ஒன்றுக்கு 200 கோடி ரூபாய்வீதம் செலவு செய்து 40 ஆண்டுகளில் இந்த ஆதாரக்கல்வி முறையை வெற்றி பெறச்செய்ய போர் பிற்கால திட்டமாக்கி இருக்கிறதாம் மத்திய சர்க்கார். கோடி கோடி ரூபாய் என்று ஏட்டிலே செலவை எழுதி இருப்பதைப் பார்க்கும் பொழுது நல்லறிவாளர்கள் பலருக்கும் கோபம் கொப்பளித்துக் கொண்டு தான்வரும். ஆனால், அவர்களுக்குச் சாந்தி அளிக்கக் கூடிய விஷயம் ஒன்றே ஒன்று தான். அதாவது இதுபோல எல்லாம் பாழ்படுத்தப் பணமில்லை சர்க்காரிடம் என்பதுதான்!

**முதியோர் கல்வி:** இதற்குப் பத்தாண்டு திட்டம் ஒன்று வகுத்திருக்கிறதாம் மத்திய சர்க்கார். இதன்படி பத்து ஆண்டுகளில், இந்நாட்டிலுள்ள நூற்றுக்கு ஐம்பது முதியோர்களைச் சகலகலா வல்லவர்களாக மாற்றப்பட்டுவிடுமாம்.

**நவீன தொழிற்கல்வி:** இதற்கான கல்லூரிகளை நாடெங்கும் ஏற்படுத்த திட்டமிடப்பட்டிருக்கிறதாம். ஆனால் தேவையான அளவு பணம் கிடைக்காததால் இத் துணைக்கண்டம் முழுவதிற்கும் நான்கு கல்லூரிகளை அமைப்பது என்று முடிவிற்கு வந்துள்ளதாம். இதன்படி கல்கத்தாவில் ஒன்று ஆரம்பிக்கப்பட்டுவிட்டதாம்.

**கல்லூரிப் படிப்பு:** இத்துறையில் பொது அறிவுத்துறையை எந்த அளவிற்கு நமது மாணவர்களிடம் அண்டவிடாமல் செய்ய முடியுமோ அந்த அளவில் கல்வி போதனையை மட்டந்தட்ட முயற்சி மேற்கொள்ளப்பட்டிருக்கிறது. 'தேசியம்' என்ற காலத்தால் கருத்திழந்துபோன ஒரு கோட்பாட்டை அடிப்படையாகக் கொண்டு, கல்லூரிக் கல்வியைச் சீர்திருத்தி அமைக்க சரவபல்லி சர். இராதாகிருஷ்ணன் தலைமையில் ஒரு விசாரணைக் குழுவும் நியமிக்கப்பட்டு, அக்குழுவும் விசாரணையை முடித்துக்கொண்டு, முழு அறிக்கை ஒன்றும் தயாரித்துவிட்டது. இன்னும் அது வெளியுலகைக் காண வெட்கப்பட்டுக்கொண்டு இருக்கிறது. அதில் எந்தெந்த விபரீதமான சித்தாந்தங்கள் நிரம்பி இருக்கின்றனவோ யார் கண்டார்கள்.

மக்களாட்சிமுறைக்கு, ஜீவாதாரமாக இருப்பது மட்டுமல்ல, அவசியமாகத் தேவைப்படுவது அறிவு மிகுந்த மனிதப் பண்பாகும். அத்தப் பண்பை அதிக அளவிற்குத் தரக்கூடியது கல்லூரிக் கல்வி. வெறும ஆவேச உணர்ச்சி அருகி, அறிவியல் பண்பாடு வளருவதற்கு அதிகமாகத் தேவை இருக்கும் இந்த நேரத்தில், அதன் மூலத்தை உருவில்லாமல் செய்ய எடுத்துக் கொள்ளும் முயற்சி ஆபத்து நிரம்பிய பயங்கரப் போக்காகும். மக்களாட்சி முறையோடு நெருங்கியத் தொடர்புடைய ஒரு கல்வி முறையை ஒழிக்க முற்படுகிறவர்களை ஜனநாயக வாதிகள் என்று கூறுவது முக்காலும் பொருந்தாது. இன்று ஆட்சிப்பீடத்தில் அமர்ந்திருப்பவர்கள் அனைவரும், ஆங்கிலேயர் தந்த கல்விப் பயிற்சியால் பண்பாடு அடைந்தவர்களேயாவர். இதிகாச புராணங்களோ, மனு மாந்தாதாக்களோ, கண்ணன் காட்டிய, உல்லாசபுரியிலே அவர்கள் உலாவ உதவவில்லை. வேண்டுமானால் அலெக்சாந்தர், கஜினி, கோரி, போர்ச்சுகீசியர், டச்சுக்காரர், பிரெஞ்சுக்காரர், ஆங்கிலேயர். ஆகிய அனைவருக்கும் அடிபணியவைத்தது நமது முற்கால தேசியப் பண்பாடுதான். அரசியல் அடிமைத்தளையை அறுத்தெறியவும், கூலி என்ற மாசைத் துடைக்கவும் அறிவுச்சுடர் கொளுத்தி ஊக்கமூட்டிய உயர்ந்த கல்விமுறையை, 'தேசியப் பண்பாடு' என்று பெயர் கூறி நாசமாக்காதீர்கள் என்று காங்கிரஸ் அமைச்சர்களுக்கு விண்ணப்பித்துக்கொள்ளுகிறோம். சுயாட்சிக்கு விண்ணப்பம்தான் முதல் வாயில். விண்ணப்பம் வேறு உருவு எடுப்பதும் எடுக்காமல் இருப்பதும், காங்கிரஸ் ஆளவந்தார்களின் செயல்களில்தான் மறைந்திருக்கிறது.

இத் துணைக்கண்டத்தின் ஜனத்தொகை 35 கோடி. எழுதப் படிக்கத் தெரிந்தவர்கள் என்பவர்கள் தொகையோ நூற்றுக்குப் பதினன்கு. மாகாண சர்க்கார் செலவிடுவது நீங்கலாக டெல்லி சர்க்கார் கல்விக்காகச் செலவிடுவது ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் நான்கரை கோடி. வடதுருவம் தென் துருவம் என்ற ஒற்றுமை இருக்கிறது டெல்லி சர்க்காரின் கல்வி திட்டமும் அதற்காகச் செலவிடும் பணதிட்டமும்!

இந்த லட்சணத்தில் மாநாடுகள்—விவாதங்கள்—விசாரணை குழுக்கள்—வாணவேடிக்கைச் செலவாகிறது வரி கொடுப்போரின் பணம். முடிவான பலன் பொது மக்களுக்குக் கிடைப்பது சொற்கள்—சொற்கள்—வெறும் சொற்கள்! அவர்களை நீண்ட நாளாகப் பிடித்திருந்ததும், இன்றும் விட்டுத் தொலையமறுப்பதுமான வாய்ச்சவடால் நோய்! தீராதத் தொழுநோய் நமது அமைச்சர்களுக்கு!

———

(12-ம் பக்கத்தொடர்ச்சி)

யடைந்தனர் நமது புராண மதிப்பினர்!

மாயனூர் குயவன் செய்த மண்பாண்ட ஓட்டைக்காட்டித்தான்—மாளிகைவாசிகளுக்கு மனம்பதறும் நிலையை உண்டாக்கினான் கிரே!

இம் மாதிரி எண்ணப்போக்கிலெல்லாம் மயங்கி இடிந்து விடாத கிரே தனது 26வது வயதில்தான் தனது 'எலிஜி'யை எழுதி முடித்தான். அதற்குப்பிறகு சுமார் பத்து வருடங்கள் கழித்துத்தான் அந்தக் கவிதை புத்தகமாக வெளிவந்தது என்றால் கிரே தனது எழுத்தோவியங்களை வெளியிட எவ்வளவு கஷ்டப் பட்டிருப்பான் என்பதை அறிந்து கொள்ள இந்த சம்பவமொன்றே போதுமானது!

கிரேயின் முழுப்பெயர்—தாமஸ் கிரே! அவன் 55 வயது வரை வாழ்ந்தான். 1716ம் வருடம், டிசம்பர் மாதம் 26ந்தேதி—அவன் பிறந்தநாள். கிரே ஏடனிலும் (ETON) கேம்பிரிட்ஜிலும் (CAMBRIDGE) கல்விகற்றான்.

ஆனால், இங்கோ மாயனூர் குயவன் செய்த ஓட்டைக்காட்டி......'தூங்குகின்றபோது வாங்குகின்ற மூச்சு திசை மாறிப் போனாலும் போச்சு' என்று பேசத்தான் பயன் பட்டது!

சுருங்கச் சொன்னால் நம்நாட்டுப் புராணிகர் சுடலையைக் கண்டே அஞ்சினர்!

'பட்டதெல்லாம் போதும் படமுடியாதினித்துயரம்'......ஈசனே சிவகாமிநேசனே, என்று அவர்கள் வேண்டியதெல்லாம் சுவர்க்கத்தை விரும்பித்தான்.

கேம்பிரிட்ஜிலிருந்து வெளியேறும் போது கிரேயின் வயது 22.

முறையே இங்கிலாந்து—பிரான்சு—இத்தாலி ஆகிய நாடுகளின் சரித்திரங்களை கிரே நன்றாக அறிந்திருந்தான்! இந்த சரிதங்களையும், புரட்சி புகைந்த வரலாற்றையும் அவன் தெரிந்திருந்ததால்தான் அவனது கவிதைகளிலே சமதர்ம மணம் வீசியது!

ஏழைகளின் தோழனை, பாட்டாளியின் [illegible]ட்டாளியாக இருந்து சமதர்[illegible]கூடிய! கிரே தனது [illegible] பெற்ற 'எலிஜி' வெளி[illegible]ங்களுக்குப் பிறகு, [illegible]71 ல் மறைந்தனன்! ஆனால், [illegible]புகழோடு இன்றும் அவன் [illegible] ஏடுகள் நாட்டிலே

பவனி வந்து பாட்டாளிகளுக்கு ஊக்கமூட்டுகின்றன.

---

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

டாலும் நான் உள்ளம் தளரமாட்டேன்! எவ்வளவு பெரிய எதிர்ப்பு வந்தாலும் நான் அஞ்சேன். என்னை இனி பூர்ணமாக நம்பலாம்.''—

குகை இல்லத்திற்குத் தூய மணியும், மருதவாணனும் வந்து சேர்ந்தார்கள்.

(தொடரும்)

---

திருவத்திபுரம்

# பொங்கல் விழா

## (நான்காம் ஆண்டு)

| | |
|---|---|
| 19-1-50 வியாழன் | Dr. தர்மாம்பாள்' சத்தியவாணி முத்து, இராமாமிர்தம் அம்மையார். |
| 20-1-50 வெள்ளி | ஈ. வி. கே. சம்பத் அன்பு. கணபதி |
| 21-1-50 சனி | நெடுஞ்செழியன் ஔவை. துரைசாமி |
| 22-1-50 ஞாயிறு | பொன்னம்பலனார் வாலாசாபாத் இ. ம. பாடசாலை மாணவர்களின் நிகழ்ச்சிகள் |
| 23-1-50 திங்கள் | பாரதிதாசன் T. K. சீனிவாசன் |
| 24-1-50 செவ்வாய் | அண்ணாதுரை, காஞ்சி. கல்யாணசுந்தரம் காளைப் பரிசுப் போட்டி |
| 25-1-50 புதன் | க. அன்பழகன் S. சோமசுந்தர பாரதியார் இரவு-10 மணி-''பாட்டாளி''-நாடகம் |

விழாவின் ஒவ்வொரு நாளும் கண் காட்சி நடைபெறும். அனைவரும் வருக.

திராவிட முன்னேற்றக் கழகத்தார்.
திருவத்திபுரம்- வ. ஆ.


அழகான பதிப்பு! அருமையான கருத்துக்கள்!

அறிஞர் அண்ணா அவர்கள் தீட்டிய

## தேவ லீலைகள்!

புராண ஏடுகளின் பொய்ம்மையைப் புட்டுப் புட்டுக் காட்டும் புத்தகம்! * இந்துமத இழுக்குகளை இடித்துக் காட்டும் இனிய நூல்

அறிஞர் அண்ணாதுரையின் பேனாமுனையிலிருந்து பிறந்து உங்கள் உள்ளத்துடன் உறவாட ஓடிவரும் சுவடி!

விலை 0 8 0 தபாலில் 0 9 0

பகுத்தறிவுப் பாசறை

பவழக்காரத் தெரு, :: சென்னை 1.

போர்வாள்

திருவள்ளுவர் ஆண்டு 1980 தை 1
14—1—50 சனிக்கிழமை

# அமைச்சரே அதற்கான திட்டம்!

வேலை தேடுகிறான் வீரன் கிடைப்பதில்லை. வீரன் வீணன் அல்ல — வயிற்றை நிரப்பிக் கொள்ள வேதாந்தம் பேசக் கற்றவனல்ல—பசியைத் தணித்துக்கொள்ள பிரபந்தமோ தேவாரப்பண்ணோ பாடும் பயிற்சி பெற்றவனல்ல. வீதி வீதியாக அலைகிறான் வேலை தேடி. வீடுவீடாக ஏறி இறங்குகிறான் வேலை கிடைக்காத ஏமாற்றத்தோடு. கண்டவர்களிடம் எல்லாம் தனது உழைப்பை விலைகூறி அலுத்துப் போகிறான்.

வந்த வினையை எல்லாம் தீர்த்துவைப்பதாகச் சொல்லப்படும் விநாயகரைக் கேட்கிறான். குறைகளை எல்லாம் குணமாக்கிவிடுவதாகக் கூறப்படும் குமரவேளிடம் கெஞ்சிப் பார்க்கிறான். மாகாளியிடத்தில் மண்டியிடுகிறான். மகேஸ்வரியிடத்தில் மாரடித்துக் கொள்ளுகிறான். வெறும் பலைக்கற்களாகவே அவைகள் இருந்து விட்டன. வீரன் மனம் உடைகிறான். வேதனை வெள்ளமாகிறது. மனத்திலே புயல் கிளம்புகிறது.

கற்கள் கரையும் வரையில் கடும்பசி காத்திருக்குமா என்ன? நிமிஷத்திற்கு நிமிஷம், வேளைக்கு வேளை, நாளுக்கு நாள், மரணத்தைக் கொஞ்சம் கொஞ்சமாகப் புகுத்துகிறது வீரன் உடலில் பசி என்றும் பாதகநோய். வீரன் பயப்படுகிறான் ஆரம்பத்தில் வாழ்க்கைப் போர் வரட்டுப்போரைக் காட்டிலும் வேதனை தருவதாக இருக்கிறதே என்று!, சிறு வயதிலிருந்து பிறர் கூறக் கேட்டு வந்த 'விதி'யை நொந்து கொள்ளுகிறான். மூளை குழம்புகிறது வீரனுக்கு!

வாழ்வதா — பசிக்குப் பலியாக மடிவதா? என்ற பிரச்சனைக்கு முடிவு காண்பதிலே முனைந்திடும் வீரனின் உள்ளம் போர்க்களமாகிறது. 'சாவுக்கு வரவேற்பளிப்பதா? மரணத்தைத் தழுவுவதா?' என்றும், நீ வீரன்—கோழையல்ல! உழைப்பாளி— சோம்பேரியல்ல! உழைப்பை விலைகூறுகிறாய் — உருப்படாத சமுதாயம் அதனை வாங்க சக்தியற்று இருக்கிறது —மறுக்கிறது! குற்றவாளி நீயா — இல்லையே! இந்தச் சதிகார சமுகத்தைக் குற்றவாளிக் கூண்டிலே நிறுத்து—விரிவான விசாரணை நடத்து — கடுந்தண்டனை கொடு! என்றும், சிந்தனை அலைகள் வீரனைச் சித்திரவதை செய்கின்றன. பசியின் கொடுமையைத் தாங்கித் தாங்கி நல்ல பயிற்சி பெற்றிருந்தும் கூட, இந்த மனப் போரை நீண்டநாட்களுக்கு வீரனால் தாங்கிக் கொண்டு இருக்க முடியவில்லை. ஏதோ ஒரு முடிவிற்கு வந்து விட்டான்.

வீரன் சிறைப்பறவையானான். வெளியுலகம் அவனுக்கு வேதனை ஸ்தலமாகிறது. சிறைக்குள் மீண்டும் புகுவதற்கான அரும்பணியை, விடுதலை அடைந்த அந்தக்கணமே செய்கிறான். மறுபடியும் வீரன் கூண்டுக் கிளியாகிறான். உழைப்பைத் தருகிறான். ஊதியம் கிடைக்கிறது. உடல் இளைக்காமல்— சாக்காட்டைக் கேலிசெய்த வண்ணம்வீரன்சிறைக்கோட்டத்திலே காலம் கழித்துவருகிறான். வீரனுக்கு, சிறைச்சாலை பூலோக சுவர்க்கம்! இந்தச் சமுதாயத்தின் சிறந்தசிருஷ்டி!

வீரன் இனம் நாட்டிலே பெருகிவருகிறதாம். நமது சென்னை சட்ட சபையில் இது பற்றி இரண்டுநாளைக்கு முன்பு கேட்கப்பட்டிருக்கிறது. நிதி அமைச்சர் கோபாலர் அதற்கு பதிலும் தந்திருக்கிறார்.

வீரன் இனம், இந்தச் சமு கத்தில் பெருகுவதற்கான காரண காரியத்தையும் நன்கு விளக்கி இருக்கிறார். பரிகாரத்தையும் கூறி இருக்கிறார். இந்த இனப் பெருக்கத்தை உடனடியாகத் தடுத்துவிட முடியாது நீண்டகாலத் திட்டத்தால்தான் அதனைத்தடுக்க முடியும் என்றும் சாற்றியுள்ளார். வீரன் இனத்தவரை முன்னேற்பாடாகக் கண்காணிக்க போலீசுக்கு கண்டிப்பான உத்திரவு பிறப்பித்திருப்பதாகவும் அறிவித்துள்ளார். இது, நீண்டகால திட்டத்தின் ஒரு பகுதிபோலும்!

வீரன் இனம் பெருகுவதற்கு அமைச்சர் கூறும் காரணம் மிக மிகப் பொருத்தமாக இருக்கிறது. அது வருமாறு:—" நாட்டுக்கு அதிகமாக மக்கள் வருவது ஒன்று; நாட்டில் இரு[illegible] நெருக்கடியான பொருளா[illegible] ஸ மற்றொன்று. இவை க[illegible] நாட்டில் உள்ள [illegible]யா பொருளாதார [illegible]கள்ளி ளைப் பெருக்கு[illegible] கோ

நன்கு ஆராய்ந்து கூறுகிறார் அமைச்சர். வீரன் வேலை தேடினான் கிடைக்கவில்லை வேதனையோடு, வேறுவழியை நாடினான். சமுதாயம் நீண்ட தனது நச்சு நாவால், வீரன் முகத்திலே வீசுகிறது சிறு சிறு சொற்களை! சமுதாயத்தை நோக்கி, கண்ணீர் விட்டான்—கதறினான்—மண்டியிட்டான்—மனமிரங்காத சமுகம், வீரன் முறை பிறழ்ந்தது கண்டு மூர்க்கத்தனமாக முணுமுணுக்கிறது. நல்லவனாக — நாணயமுள்ள உழைப்பாளியாக — இருக்கவேண்டுமென்ற நல்லெண்ணத்தோடு, சமுகத்தைக் கெஞ்சிக் கேட்டபோது, ஆறுதலான இரண்டொரு வார்த்தை இல்லை — அனுதாபப் பார்வை இல்லை — புன்முறுவல் காட்டவில்லை இந்தச் சமுகம் வீரனிடம் நையாண்டி செய்தது—நிந்தித்தது — காறி உமிழ்ந்தது— நாயே பேயே என்று வசைபொழிந்தது. வீரனுக்கு வேலை கொடுத்து உயிரோடு இருக்க வைக்க முன்வாராததோடு, தன்னுடன் சேர்ந்து வாழ வலிய வந்த வீரனை விரும்பத் தகாத வேறோர் அணிக்கு விரட்டி அடித்து ஆர்ப்பாட்டம் செய்தது சமுகம். துரத்தித் துரத்தி விரட்டியது. துன்பத் தீயிலே சமுகத்தால் தூக்கி எறியப்பட்ட தூயவன், கருகிப்போய் இருப்பதைப் பார்த்து, தான் அறிந்தோ அறியாமலோ இழைத்த தீங்கிற்காகக் கண்ணீர்விட வேண்டிய சமுகம் — வீரனிடம் மன்றாடி மன்னிப்புப் பெற்றுச் சீர்திருத்தவேண்டிய சமுகம்— கேலி பேசுகிறது கேலி!

வீரன் இனத்தை வளர்க்கிறது இன்றைய சமுதாயம். இதைத்தான் வேறு வார்த்தைகளில் கனம் கோபாலர் சுட்டிக் காட்டுகிறார். இன்றுள்ள பொருளாதார ஏற்பாடு, அனைவருக்கும் சரிசமமாக வாழ்வதற்கான வாய்ப்பினைத் தருவதாக இல்லை. சிலர் உயர்ந்த வாழ்வு வாழவும் பலர் அவர்கள் காலடியிலே சிக்கிச்சீரழியவுமான முறையில் இன்றையப் பொருளாதார ஏற்பாடு இருக்கிறது பலர் உழைக்க அந்த உழைப்பை உறிஞ்சி சிலர் உண்டு கொழுத்து, சத்தியம்— சன்மார்க்கம் — சமரசம்— சாந்தி—என்று பேசிக் களித்திருக்கும் நிலையை நிரந்தரமாக்கி இருக்கிறது இன்றுள்ள பொருளாதார அமைப்பு முறை. இந்த ஆகாதமுறையை அடியோடு தரைமட்டமாக்கிவிட்டு, வேறொரு புதிய ஏற்பாட்டை அமைத்துக் கொள்வதினால்தான் வீரன் இனப் பெருக்கை நமது சமுகத்தில் இனி என்றென்றும் தோன்றவிடாமல் செய்ய முடியும்.

நோய் நின்ற நிலையை அறிந்திருப்பது போலவே, இந்தப் பரிகார முறையையும் கனம் மந்திரியார், இன்று மறந்திருந்தாலும் ஒரு காலத்தில் மனப்பாடம் செய்திருந்தவராகத்தான் இருக்க வேண்டும். சாந்திநிகேதனத்தில் கல்வி கற்றவராயிற்றே கனம்!

கனம் கோபாலர், நாடாளும் நிதி அமைச்சர் — சாதாரண சமுக தத்துவ சாஸ்திரி அல்ல, நோயைக் குறிப்பிட்டுவிட்டு, அதற்கான பரிகாரத்தைப் பகர்ந்துவிட்டு, கையைக் கட்டிக் கொண்டு இருக்க. ஆனால் நோயைக் குறிப்பிட்ட அளவிற்கு, பரிகாரத்தை விளக்கமாகக் கூற மறந்துவிட்டார். எடுத்துக் கொள்ளவேண்டிய தடுப்பு முறையை, நீண்டகாலதிட்டத்தால்தான் இப்பிரச்னையைத் தீர்க்க முடியும் என்று பொதுவாகக் கூறுவதோடு நின்றிருக்கிறார் அமைச்சர். அதற்கான திட்டமிருக்கிறதா அமைச்சரே, திருவாய் மலர்ந்தருளுங்கள் என்று நாம் கேட்கிறோம் சட்டசபையில் கேள்வி கேட்கின்ற உறுப்பினர்களை, ஏதாவது கூறி வாய்மூடச் செய்துவிடலாம்—அதுதான் வாடிக்கையாகப் போய்விட்டதே! பொது மேடைகளிலேபேச்செழுந்தால், தாள்களிலே கண்டனம் கிளம்பினால், 'பதவிப்பித்தர்கள் பிதற்றுகிறார்கள் இவ்வாறு, என்று பழி சுமத்தி, பொது மக்கள் கண்ணையும் கருத்தையும் வேறு பக்கம் திருப்பிவிடலாம். இதுவும் முடியவில்லையானால், அவசரச் சட்டங்களை அடுக்கடுக்காக அள்ளி வீசி, விளக்கம் கேட்போரை, வேதனை போக்க முனைவோரை, அடக்கி ஒடுக்கிவிடலாம் சிலநாளைக்கு — இதிலும் தான் அமைச்சர்களுக்கு நல்லதோர் தேர்ச்சி இருக்கிறதே! ஊர் வாய்க்கு மூடி உண்டு உலைவாய்க்கு மூடி கிடையாதே மந்திரியாரே, உமக்கும் மனசாட்சி உண்டே, அது உணர்த்திடுமே உம்முள் இருந்து கொண்டே, அதற்கு சமாதானம் கூறுங்கள் —அதுவே போதும்!

வீரன் இனம் வளராமல் இருக்க நீண்டகால திட்டம் என்னவைத்திருக்கிறீர் அமைச்சரே, அதனை நாடறிய நவிலுங்கள்! அப்படி ஏதாவது இருந்தால்' அதனை எப்பொழுது அமல்நடத்தபோவதாகத்தீர்மானித்திருக்கிறீர்கள், அதையும் கொஞ்சம் திட்டவட்டமாகக் கூறிவிடுங்கள்! இதுவரை வீரன் இனத்தை ஒழித்துக் கட்ட போலீஸ்படைக்கு உத்திரவு போட்டு வந்திருப்பதை மேலும் கொஞ்சம் தீவிரமாக்குவது தான் தங்களுடைய நிரந்தரமான நீண்டகால திட்டமா என்பதையும் தெளிவுபடுத்துங்கள்—நமக்கல்ல— உங்கள் மனசாட்சிக்கு! அமைச்சரே எங்கே அதற்கான திட்டம்? இருக்கிறதா?

—

**சிறுவர் பகுதி:**

# அஞ்சல் தலைகள்—ஒரு வரலாறு!

ரோலண்ட் ஹில் என்ற ஓர் ஆங்கில ஆசிரியர் தான் முதல் முதலாக ஸ்டாம்புகளைக் கண்டுபிடித்தார். அவர் ஒரு சமயம் ஸ்காட்லாந்தில் ஒரு கிராமத்துக்குப் போயிருந்தார். ஒருநாள் தாபால்காரன் வந்ததும் எல்லோரும் அவனைச் சுற்றி கும்பல் கூடி, தங்களுக்கு வந்திருக்கும் கடிதங்களை வாங்கி கொண்டார்கள். அக்காலத்தில் தபால் யாரிடம் போய் சேருகிறதோ அவர்களிடமிருந்தே தபால் கூலியை வசூலிப்பது வழக்கம். மேரி என்ற பெண்ணும் ஓடோடிப் போய், அவளுக்கு வந்திருக்கும் கடிதத்தை வாங்கிக் கொண்டாள். கொஞ்ச நேரம் கடிதத்தின் உறையை உற்றுப் பார்த்து விட்டு; "தபால் கூலி செலுத்த என்னிடம் பணம் இல்லையே, நான் இதை எப்படி வாங்கிக் கொள்வது?' என்று சொல்லி, கடிதத்தைத் தபாற்காரனிடம் கொடுத்துவிட்டாள்.

இவ்வளவையும் அருகில் இருந்து பார்த்துக் கொண்டிருந்த ரோலண்டுக்கு அந்தப் பெண்ணிடம் அநுதாபம் ஏற்பட்டது. அவர் தபாற் கூலி அரை கிரௌனைச் செலுத்தி விட்டு, கடிதத்தை வாங்கிப் பெண்ணிடம் கொடுத்தார். மேரி ஒன்றும் பேசமல் அதை வாங்கி ஜேபியில் போட்டுக் கொண்டாள்.

"ஏன் உறையைத்திறந்து பார்க்கவில்லை?" என்று ரோலன்ட் கேட்டதற்கு, மேரி இவ்வாறு பதிலளித்தாள்: "இந்தக்கடிதம் பட்டாளத்தைச் சேர்ந்த என் காதலனிடமிருந்து வருகிறது. வாரந்தோறும் இப்படி ஒன்றுவரும். எனக்கு ஒரு வாரத்தில் கிடைக்கும் சம்பளம் தபாற் கூலிக்கு மட்டும் தான் சரியாக இருக்கும்; அதனால் என் காதலன் அறிவிக்க விரும்பும் செய்திகளை உறையின் மேல் சின்னங்களை மாத்திரம் கவனித்துக் கொண்டு, கடிதத்தை தபாற்காரனிடமே கொடுத்து விடுவேன்.''

மேரி உறையின் மேல் இருந்த சின்னங்களை ரோலண்டிடம் காண்பித்தாள். பிறகு உறையைத் திறந்து உள்ளே இருந்த காகிதத்தையும் காண்பித்தாள். அதில் ஒன்றுமே எழுதியிருக்க வில்லை.

அவ்விருகாதலர்களின் புத்திசாலித்தனத்தை ரோலன்ட் மிகவும் மெச்சினார். உடனேயே தபாற்கூலியைக் குறைக்க வழி என்னவென்று சிந்திக்கத்தொடங்கினார் கடைசியில் ஓர் அபூர்வமான வழி அவர் மூளைக்கு எட்டினது. அது என்னவெனில், அரசரின் உருவப்படத்தோடு கூடிய ஒரு காகிதத் துண்டை உபயோகிக்க வேண்டும என்பது தான். கடிதம் எழுதுபவர்களே தபாற்கூலியைச் செலுத்தி, அதற்கு ரசீதாக ஒரு ஸ்டாம்பு வாங்கி, உறையின் மேல் ஒட்டி அனுப்ப வேண்டும் என்பது அவர் யோசனை.

ரோலன்ட் தமது யோசனையைச் சர்க்காருக்குத் தெரிவித்தார். ஆனால் அது சரியாகப் படவில்லை. ரோலன்ட் எப்படியாவது தமது யோசனையை அமுலுக்குக் கொண்டு வர வேண்டும் என்று எண்ணி, ஸ்டாம்புகளின் உபயோகத்தைப்பற்றிப் பல புத்தகங்கள் எழுதி வெளியிட்டு, ஜனங்களிடையே பிரசாரம் செய்ய ஆரம்பித்தார். கடைசியில் அவருடைய முயற்சிவெற்றி பெற்றது. அப்போது அரசு புரிந்து வந்த விக்டோரியா மகாராணி அவருக்குப்பேட்டியளித்தார். ரோலன்டின் யோசனை அவருக்குப்பிடித்ததினால், உடனே ஸ்டாம்புகளை அச்சிடும்படி கட்டளையிட்டார். முதல் ஸ்டாம்பு 1840-ம் வருஷம் மே மாதம் 6-ம் தேதி வெளியாயிற்று. அதன் மதிப்பு ஒரு பெனியாக இருந்தது. அதை யாவரும் "பெனி பிளாக்" (கறுப்பு பெனி) என்று வழங்கலாயினர். இந்தியாவில் ஸ்டாம்புகளை உபயோகிக்கும் வழக்கம் 1852-ல் ஏற்பட்டது. பின்னர் தான் மற்ற நாடுகளில். ஏற்படலாயிற்று. இப்போதோ, அஞ்சல் தலைகளைப் பயன்படுத்தாத நாடே உலகத்தில் இல்லை எனத்தகும் நிலை ஏற்பட்டுவிட்டது

---




தொடர்கதை :

இருபதாம் பகுதி

## அச்சடித்த பதுமை

ஒரு கல்லாசனத்தின் மீது நான் படுத்துக் கொண்டிருப்பதாக உணர்ந்தேன்! மெதுவாகக் கண்களைத் திறந்தேன்! முகத்தில் வியர்வை அரும்ப, முகிலன் விசிறிக் கொண்டிருந்ததை அறிந்தேன்.

'ஐயோ, நான் சாகவில்லையே!'' என்று ஐயத்தோடும் ஏக்கத்தோடும் வினவினேன்!

"மரணமா?......உனக்கல்ல அப்பா, உன்னை ஏமாற்றிய அந்த வஞ்சகிக்கு!"

"என்ன? என்ன? காதகி செத்து மடிந்தாளா?"

"ஆமாம்! மலை உச்சியினின்று வீழ்ந்து மடிந்து தொலைந்தாள்!"

அப்பா, என்று ஒரு பெரு மூச்சு விட்டேன்! முகிலனும் நானும், முன்பு நீ கண்டாயே, அந்தக் குகை யில்லத்திற்கு வந்து சேர்ந்தோம்.

"விஷமுத்தம் பெற்று, இறக்கப் போன என்னை எப்படிக் காப்பாற்றினீர்கள்?" என்று நன்றியறிதலான குரலில் கேட்டேன்.

"மூலிகையின் உதவியினால் மரணத்தின் வாயினின்று உன்னைப் பிழைக்கச் செய்தேன்" என்று சாந்தமாக முகிலன் கூறினார்.

"அந்தச் சஞ்சீவி மூலிகையின் பெயரை நான் அறிந்து கொள்ளலாமா?"

"அறிந்துகொள்ளப்பா, நன்றாக அறிந்து கொள்! அதன் பெயர் தும்பை! தும்பை இலைகளைப் பறித்து, அதினின்றும் சாறு பிழியவேண்டும். அந்தத் தும்பைச் சாற்றை உட்கொண்டால், கடும் விஷமாக இருந்தாலும் அதனை மாற்றி விடும்!"

"அவ்வளவு சக்திவாய்ந்த மூலிகையுமிருக்கிறதா?"

"பைத்தியக்காரனாக விருக்கிறாயே! மூலிகைகளினால் செய்ய முடியாதது ஒன்றுமே இல்லை! தமிழ்நாட்டுக் காடுகளில் கிடைத்தற்கரிய சிறந்த மூலிகைகள் ஏராளமாக இருக்கின்றன! எனக்குத் தெரிந்த மட்டில் அவற்றை உனக்குக் காட்டி விளக்குகிறேன்!........."

"மிகவும் நன்றி!"

முகிலன் குறுநகை செய்தார். முதல் முதல் நீ குகையில்லத்தில் நுழைந்த போது, நொண்டிக் கிழவனைத் தவிர, நீ என்ன என்ன கண்டாயோ, அனுபவித்தாயோ, அவை அவ்வளவையும் நானும் கண்டேன், அனுபவித்தேன்.

முகிலனின் உதவியினால் ஒரு நாள் இசையொலியும் இரு குழந்தைகளும் அங்கு வந்து சேர்ந்தார்கள். என் பகலை மட்டும் குகையில்லத்திலேயே நான் நிறுத்திக் கொண்டேன். நாட்டிலும் அரண்மனையிலும் நடைபெறுபவைகளை எங்களுக்கு அறிவிக்கும் பணியில் ஈடுபட, இசையொலி இளவரசரின் குழந்தையோடு திருவஞ்சைக் களத்திற்குச் சென்று தங்கலானாள்!

பாண்டிய நாடும் அரச குடும்பத்தினரும் அழிந்து மடிந்ததோடு, நானும் குழந்தைகளும் ஆதரவற்று நின்றுவிட்டதோடு, என்வாழ்வின் முதற்பகுதி முடிவுற்றது எனக் கூறினேன் அல்லவா? செந்தமிழ் வாழ்க என்றதற்குப் புண்பரிசு பெற்று, நாடு கடத்தப்பட்டு, குகை இல்லத்திற்கு வந்து சேர்ந்ததோடு என் வாழ்வின் இரண்டாம் பகுதியும் பூர்த்தியாயிற்று!

தமிழனின் வீரம் தரணி முழுவதும் மாசற்ற முறையில் பரவும் நாள் எந்நாள்? வஞ்சகரின் வலையிலிருந்து வளமிகு நாடு மீளும் நாள் எந்நாள்? சூழ்ச்சி முறையில் பாண்டிய நாட்டைப் பிடித்த சோழனை விரட்டும் நாள் எந்நாள்?—— உள்ளத்தில் இப்படிப் பட்ட ஏக்கங்களுக்கள் எழுந்த வண்ணம் — சாதிக்க வேண்டியவைகளைப் பற்றி சிந்தித்த வண்ணம் —— இப்பொழுது நான் வாழ்ந்து வருவது வாழ்வின் மூன்றாம் பகுதியாகும்!

தூயமணி, இதுதான் தம்பி என் வரலாறு!

* * *

கிழவன் மருதவாணன் தன் சோகமிக்க வரலாற்றைக் கூறி முடித்தான். அச்சடித்த பதுமை போல தூயமணி உட்கார்ந்திருந்தான்! அவன்

ஆழ்ந்துவிட்டிருந்தான் தீவிரமான சிந்தனையில்! கண்களில் புதுவிதமான ஒரு ஒளி பிரகாசித்துக் கொண்டிருந்தது

"தூயமணி, இப்பொழுது புரிந்து கொண்டாயா, ஆரிய மாயை என்றால் என்னவென்று?" என்று மருதவாணன் வினவினான். அவனது சுருக்கம் விழுந்த முகத்தில் வருத்தத்தின் வர்ணம் பூசப்பட்டிருந்தது!

"ஐயோ, புரிந்து கொண்டேன் ஆரியரின் மாயவலை என்றால் என்னவென்று சேரன் சேதனனை மாசு மறுவற்ற மாபெரும்வீரா என்று எண்ணிக் கொண்டிருந்தேன்! தங்களது வரலாற்றை அறிந்த பிறகு, படுபள்ளத்தில் வீழ்ந்து விட்ட பாழும்பதர்என்பதைத்தெரிந்து கொண்டேன்! மக்களுக்கு வழிகாட்டும் நல்லோன் என்று மனக்குரு வேதபாரகனைப் பற்றி கருதிக் கொண்டிருந்தேன்! தமிழரின் வாழ்வைப் பாழாக்கி அழிக்க வந்த தருக்கன் என்பதை இப்பொழுது தான் அறிந்து கொண்டேன்! ஐயோ, தெளிவுபெற்றேன்! தாய்நாட்டின் மீதும் என் வீரத்தின் மீதும் ஆணையிட்டுக்கூறுகிறேன், ஆரியரின் ஆதிக்கத்தை ஒழிக்கும் மட்டும் நான் திருவஞ்சைக் களத்தில் காலெடுத்து வைக்க மாட்டேன்! ஆத்திரமாகத் தங்களை ஏதேதோ பேசிவிட்டேன் அறியாமையின் காரணத்தால். மன்னிக்க வேண்டும் என்னை. மன்னனை மீட்கும் தங்கள் பெரும்பணிக்கு என்னை ஒரு சிறு அம்பாக ஏற்றுக் கொள்ள வேண்டும்" என்று தூயமணி கூறி முடித்ததும், அவன் கண்கள் கலங்கின.

"உண்மை வழி அறிந்து நீ நடக்கத் துணிந்ததற்காக உவகை கொள்கிறேன்! இந்தப் பணியை முடிக்க என்னைவிட உனக்குத்தான் திறமையும் வசதியும் ஏராளமாக இருக்கின்றன!"

"உங்கள் அறிவிலும் ஆற்றலிலும் ஆயிரத்தில் ஒரு பாகம் கூட என்னிடமிருக்காது! வீணாக என்னை ஏன் புகழ்கிறீர்!" என்று எழுந்து கொண்டே தூயமணி கூறினான். மருதவாணன் அவன் பேச்சைக் கவனிக்காது, வேறு எதனையோ உற்றுக் கேட்பதை வீரன் அறிந்தான். அதன் பிறகு அவன் காதிலும், குதிரைகள் வரும் சப்தம் கேட்டது!

இருவரும் மறைவான ஒரு இடத்தில் ஒளிந்து கொண்டனர். அவ்வழியே மன்னனும் மதக்குருவும் குதிரைகளின் மீது செல்வதைக் கண்டனர்.

சிறிது நேரம் சென்றதும் தூயமணியும், மருதவாணனும் குகையில்லத்தை நோக்கிச் சென்றனர்!

"தூயமணி உன்னைப் பற்றி, உன்னைக் காண்பதற்கு முன்னரே கேள்விப் பட்டிருக்கிறேன்!"

"என்ன?"

"ஆமாம் தம்பி, உண்மை தான்! இளவரசி வஞ்சியை நீ காதலிக்கிறாய் அல்லவா?"

வீரன் திடுக்கிட்டு கிழவனைப் பார்த்தான். கிழவன் புன்னகை செய்துவிட்டுப் பேசினான்:

"இதிலென்ன அப்பா இருக்கிறது மிரள! இயற்கைதானே! தக்க வயது உனக்கு! தளிருடலாள் அவள்!..........."

"ஐயோ! தாங்கள் நினைப்பது தவறு!"

"நான் நினைப்பது அல்ல, நீ நினைப்பது! காமம் பிடித்தவள் வஞ்சி என்பதுதானே உன் கருத்து! முற்றும் தவறு. வஞ்சியின் உள்ளத்தை நீ பூர்ணமாகக் கொள்ளை கொண்டுவிட்டாய் ......... பெரிய கைக்காரனப்பா நீ!.........."

"உண்மையிலேயே இளவரசிக்கு என் மீது காதலிருக்கிறதா?"

"வேலின் கூர்மையை அறியும் அளவிற்கு, பெண்களின் இதயத்தை அறிய உனக்கெங்கே தம்பி அனுபவமிருந்திருக்கப் போகிறது? என்னை நம்பு, அவள் உயிர் நீதான்......"

தூயமணியின் மனதில் களிப்புப் பொங்கி வழிந்தது.

"ஐயோ, தங்கள் திறத்தையும், செய்திகளை அறிந்து கொள்ளும் ஆற்றலையும் என்னால் அளவிட்டுக்கூட பார்க்க முடியவில்லையே! தாங்கள் ஒரு அபூர்வமான பிறப்பு!"

"அபூர்வமான பிறப்புமில்லை ஒன்றுமில்லை! வாழ்க்கையில் ஏற்பட்ட அனுபவமே என்னை ஒருவாறு உருவாக்கி இருக்கிறது. அது இருக்கட்டும் தம்பி, இளவரசியின் உதவியினால் தான் நம் லட்சியத்தை நிறைவேற்ற முடியும் அவளை நீ ஏற்றுக் கொள். அவள் ஆசைக் கயிற்றுக்கு நீ பம்பரமாகு! இதனை மறுக்காதே.........ஏன் தயங்குகிறாய் ...... வெட்கமா? ......... சரி என்று சொல், தம்பி!........"

"தங்கள் விருப்பத்திற்கு மாறாகவும் இனி நடப்பேனா?"

"தம்பி நம் இலட்சியம் பெரிது! அதன் வெற்றிக்காக நான் பலியானாலும் ஆவேன்! நீயும் இளவரசியும் பலியாக வேண்டியிருந்தாலும் இருக்கும்! வீரன் நீ, வெற்றிதான் உன் நோக்கமாக இருக்கவேண்டும்........"

"இன்னுமா என்னிடம் தங்களுக்கு ஐயம்? சேரநாட்டையும் பாண்டியநாட்டையும் மீட்க நாம் அனைவரும் கூண்டோடு பலியாக வேண்டி நேரி

(5-ம் பக்கம் பார்க்க)

# கவிஞன் கிரே

**தங்கவேலர்**

சிந்தனைச் சோலையிலே பறந்து திரிபவர் கவிஞர். இவர்களிலே பலரகமுண்டு! புதியதோர் உலகு செய்வோமென புரட்சி முழக்கம் செய்து கவிதை தீட்டிய கவிஞர் பாரதிதாசனும், இவரது கருத்துக்கு நேர்மாறான எண்ணங்கொண்டு வயலிலேவாடும் உழவனைப் பற்றிக் கவிதை தீட்டாது—வான் முட்டும் கோபுரத்தில் குடிபுகுந்துள்ளோனைப் பற்றிக் கவிதை தீட்டிடும் கவிஞர்களும்; வாடும் முகத்துடன் நாடு பலரைக் கொண்டிருக்க ஓடு தங்கத்தால் வேண்டுமா நடராசா! என தில்லை வாசியைத் தட்டிக் கேட்கும் திறனில்லாது—அவன் ஆட்டத்தையும் ஆடியபாதத்தையும் பற்றிக் கணக்கற்ற கவிதைகள் தீட்டிய கவிஞர்களும், 'நேற்றோ கழிந்துவிட்டது. நாளைஎன்பதுஇனி மேல்தானே பிறக்கப்போகிறது. அது எப்படியிருக்குமோ! இன்றே இனியநாள். கிண்ணம் நிறையத் திராட்சை ரசத்தை ஊற்றிவிடு" என்று கூறும் முறையிலே........

"பின்னாள் எண்ணி கடுங்குவதேன்?
பெண்ணே கிண்ணம் நிறையம்மா"

எனத் தனது துணைவியைப் பார்த்துக்கூறுவது போலக்கவிதை தீட்டியபாரசிகக் கவிஞன் உமர்க்கய்யாமும் கவிஞருலகிலே உலவியவர்கள் தான்!

காணாத காட்சிகளைக் கவிதையிலே பாடியவர்களையும், மதுவையும் மங்கையையும் விரும்பிப் பாடிய உமர்க்கய்யாமையும்விடப் புதியதோர்உலகு செய்வோமென மக்களுக்கு அன்பழைப்புவிடுத்த கவிஞனின் புகழும் அவன் எழுதிய கவிதைகளின் தரமும் எவ்வளவோ உயர்ந்தது!

இந்த உயர்ந்த எண்ணத்திலே கவிதைதீட்ட பாரதிதாசன்போன்ற ஒரு சிலர்தான் நம் நாட்டுக்குக் கிடைத்தனர். ஆனால், மேலை நாட்டுக் கவிஞர்களின் சரிதை இந்த முறையி லில்லை. இன்று நம் நாட்டிலே புது உலகைக் காணவிரும்பும் கவிஞர்களைக் கேலியும் கிண்டலும் செய்து, அவன்முயற்சியைத் தடை செய்ய எண்ணுகிறார்களே அது போலத்தான், மேலை நாட்டிலே புரட்சி முழக்கம்செய்த கவிஞர்களுக்கும் மாளிகைவாசியின் கேலியும் மத குருவின் கிண்டலும் ஒன்று சேர்ந்து அவன் முயற்சியைத் தடைசெய்ய முயன்றன.

எதிர்ப்பையும், ஏளனத்தையும் தாங்கிக்கொண்டு புரட்சி முழக்கம் செய்ய பல கவிஞர்கள் கிளம்பினர்!

அந்தக் கவிஞர்களின் வரிசையிலே இடம் பெறுபவன் தான் "கிரே" என்ற ஆங்கிலக் கவிஞனும். கிரே வாழ்ந்த காலம் பதினெட்டாம் நூற்றாண்டு. உலகிலே வாழப் பிறந்தவர்கள் உயர் பிறவியினர் தானெனத் தமக்குள்ளே எண்ணி உப்பரிகையிலே உலவியோர் உழைப்பாளிகளை அலட்சியம் செய்த காலமது! அந்தப் பதினெட்டாம் நூற்றாண்டிலே, பண பலம் — பட்டினிப் பட்டாளமான பாட்டாளிகளைப் பயந்து பதுங்கும் படி செய்து கொண்டிருந்தது. பண பலத்துக்கு, பாராள்வோன் பக்கத்துணை யிருந்தான். பாவலரும், நாவலரும் அவன் பாத மலரடி போற்றுவோரா யிருந்தனர். சீமாட்டிகளின் சிரிப்பொலி, அதற்கு சிந்துபாடும் சிறு மதிபடைந்த சீமான்கள் — இந்த விதமாக அமைந்திருந்தது அப்போதைய இங்கிலாந்து!

அந்தக் காலத்தி
வாசிகையும் அ
ச்சியைத்தந்த
பற்றித்தான் பே
தீட்டக் கவிஞர்
தவிர...........ச
திற்கும் — சதிர
பாற்பட்ட தொ
தியிலே புரன்
உழைப்பின்
எண்ணவே போ
கவிதைகள் எங்
படித் தீட்ட முடி

கஞ்சியில்லை
கொண்டிருந்த
கவிதையாகப் பா

படைத்தவனின் கசையடி எங்குத் தமக்குக் கிடைத்து விடுமோவென கவிஞர்கள் கலங்கிக்கொண்டிருந்த நேரத்தில் தான் "கிரே" கவிஞனுன்.

அறிஞர் அண்ணாத்துரை தனது ஆங்கில வானொலிப் பேச்சொன்றிலே .........

I AM THE PEOPLES POET, I SING FOR THEM AND ABOUT THEM, BECAUSE I AM ONE OF THEM. "...என்று குறிப்பிட்டுக் காட்டுவதுபோல "நான் மக்கள் கவிஞன். நான் மக்களைப்பற்றி மக்களுக்காகவே பாடுவேன்—ஏனெனில் நானும் அவர்களில் ஒருவன் தான்" எனக் கூறி கிரே கவிதை எழுதக் கிளம்பினான்.

ஆலைச் சங்கின் ஓசையைக் கேட்டு அலறியடித்துக் கொண்டு தன் ஓலைக் குடிசையை விட்டு வெளியேறும் தொழிலாளியின் நிலையைக் கிரே நேரிலே கண்டான் —அதே நேரத்திலே ஆறடுக்குமாடியிலே ஆரணங்குகளோடு ஆடிப் பாடிக் களிக்கும் ஆலை அரசர்களையும் பார்த்தான்!

ஆலை அரசர்களின் ஆர்ப்பாட்டத்துக்கு ஆளானவர்கள் தான் கிரேயின் கவிதையிலே கதாநாயகர்களாக உலவினர். மாடிவீடும் மன்மத புரியினரும் அவனது கவிதையிலே காட்சி தரவில்லை—மண் குடிசையும் உழைத்து ஓட்டாண்டியான பாட்டாளியுந்தான் காட்சி தந்தனர்.

மாதாகோவிலும் — மதகுருக்களும் அவனது கவிதையிலே வட்டமிடவில்லை!

மழலைமொழி பேசிடும் மங்கையரின் மடியிலே கிடந்த மாளிகை
... கவிதை

இவன் போக்கை விரும்பாத அவன் காலத்தில் வாழ்ந்த மற்ற கவிஞர்களும் மாளிகை வாசிகளும் கிரேயின் புதிய பாதையைக்கண்டு பதை பதைத்தனர்.

இங்கு நமது நாட்டிலே, "பச்சை மரம் பட்டுவிடும் இச்சைக்குரியவளும் ஏகிடுவாள் இடுகாடு" என்று வாழ்க்கையின் நிலையாமையைப் பற்றி பாடிக்கொண்டிருந்தவர்களும், பழமை விரும்பிகளும், பாரதிதாசனாரின்........."மணவாளன் இறந்தால் பின் மணத்தல் தீதோ? பாடாத தேனீக்கள், உலவாத்தென்றல், பசியாத நல் வயிறு பார்த்ததுண்டோ?"........என்ற பாடலைக் கேட்டவுடன் பதை பதைத்தனரே அதைப்போலத்தான் 'கிரே'யின் புதிய பாதை அவன் காலத்தில் வாழ்ந்த பழமை விரும்பிகளுக்கு எரிச்சலையூட்டி இவனை எத்தனென்று எள்ளி நகையாடச்செய்தது.

* * *

கிரே எழுதிய எல்லாக் கவிதைகளையும் விட 'எலிஜி' (ELEGY) என்ற கவிதைதான் அவன் போக்கைவிரும்பிய அறிஞர் உள்ளத்தைப் பெரிதும் கவர்ந்தது!

கிராமிய மக்களின் நிலையை விளக்கும் கவிதை 'எலிஜி'. எழில் மிகு கிராம மொன்றின் புதை குழியருகே உலவிய கிரே, தனது கவிதையுள்ளத்தை— புதை குழியிலே மறைந்திருந்தவர்கள்மீது திருப்பி அவர்களை உலகோர்க்கு அறிமுகப்படுத்துகிறான்.

* * *

நீண்டு வளர்ந்த மரங்கள், அதை ஒட்டியே செல்லும் நடைபாதை, அதையும் அடுத்து குளிர்தரும் சோலைகள் [illegible]

[illegible] தான் உலவுகிறான் கிராமியன் தன் வாழ்க்கைப் பாதையில்!

கதிரவன் ஒளி நிலத்தில் விழு முன்னே, கலப்பையும் கையுமாக தன் மனைவியின் அன்புமொழியைக் கேட்டுக்கொண்டே வெளியேறும் கிராமியன், பொழுது முழுதும் உழுது அலுத்து, மனதை மயக்கும் மாலைநேரத்திலே வீடு திரும்புகிறான்.

இதுதான் கிராமியன் தினசரி வாழ்வு.

இப்படி உல்லாச புருஷர்களுக்காக கிராமியன் உழைத்தும்...... பண்ணையாரின்— பதட்டப்பேச்சு! மிட்டாமிராசுகளின் — கொட்டம்! நாட்டாண்மைகளின் — மிடுக்குப் பார்வை! அதிகார வர்க்கத்தாரின் அலட்சியப் புன்னகை! மாடிவீட்டாரின்—மந்தகாசச் சிரிப்பு........ இவற்றையே அவன் பரிசாகப் பெறுகிறான்.

இவைகளையெல்லாம் சகித்துக்கொண்டு கிராமியன் தன் வாழ்க்கைச் சக்கரத்தை ஓட்டுவதை நாம் கண்முன் கொண்டுவருகிறான் கிரே தனது 'எலிஜி' மூலமாக!

எந்நேரத்திலும் உள்ளத்திலே புயல்வீச உதட்டிலே புன்னகை சிந்திக் கொண்டிருக்கிறார்களே நகர்வாழ் பூவையர் அவர்களிடமிருந்து மாறுபட்டவர்கள் கிராம மங்கையர். அவர்களது தளிர் மேனியைத் தங்க ஆபரணங்களோ அழகு சாதனங்களோ அணி செய்யவில்லை. பசும் புல் தரையைத்தான் இவர்களது படுக்கையாக அமைத்துக் கொண்டனர் — பஞ்சணையை அல்ல! சூதும் வாதும் இவர்கள் கண்டறியாதன.

இதோ பாருங்கள் இந்தப் புதை
யை! இவர்கள் உழைத்தது
படுத்துவிட்டார்கள்
உழைத்துக்
கள் இது போ
டமாட்டார்கள்!
களில் எழுச்சி
அலைமோதும்
ரின் அம்புபட்ட
துள்ளிக்குதித்த
ழ்வு! இன்று
படுகிற இந்த
மியனும், ஹாம்
EN) மில்டன்
வெல் (CROM-
பிரசித்தி

யடைந்திருப்பார்கள் அவர்களுக்கு இருந்த வசதியையும் வாய்ப்பையும் போல இவர்களுக்குமிருந்திருந்தால்! ஆனால், கல்வி என்ற பூரண நிலவின் ஒளி இவர்களுக்கு கிடைக்காதவாறு மறைத்து விட்டன மேட்டுக்குடியினர் என்ற மேகங்கள்!

கிரே இன்னும் இதுபோன்ற பல உண்மைகளை எடுத்துக் காட்டுகிறான் தனது 'எலிஜி' மூலமாக.

* * *

நமக்கெல்லாம் சாதாரணமாகக் காட்சியளிக்கக் கூடிய ஒரு புதை குழி கிரேயின் கண்களுக்கு கலையின் பீடமாக அமைகிறது மக்கள் மரணபுரியின் அன்பழைப்பை ஏற்றபிறகு—மகேசுவரனிடம் மன்றாடும் நிலையைத்தான் கிரே காலத்து கவிஞர்கள் தீட்டினரே தவிர...... கிரே தீட்டியபடி புதைந்த மண்டை ஓடுகள் சமயமேற்பட்டால், மண்டலத்தையும் மக்கிமடியச் செய்யும் மாண்பு பெற்றது என்பதை விளக்கவுமில்லை — விளக்க எண்ணவுமில்லை!

ஏன்! நமது நாட்டுப் பழங் கவிஞர்களைத் தான் எடுத்துக் கொள்வோமே! சுடலை மீது நீறு பூசி ஆடிய சிவனார் தான் அவர்களின் கண் முன் காட்சி தந்தாரே தவிர கிரே புதை குழியைப் பார்த்த கண்ணோட்டத்தோடு இவர்கள் நோக்கவில்லை!

அப்பன் சுடலை மீது ஆட—அன்பர் குழாம் (அய்யன் அடியார்கள்) ஆனந்தப் பரவசங் கொண்டு தாளம்போட —இந்த இன்பந்தரும் நிகழ்ச்சியை 'நாமக்கல்லார்' போன்ற கவிஞர்கள் பாடவுமான மனநிலையை உண்டாக்கும் முறையில் தான் காட்சி தருகின்றன நமது நாட்டுப் புதை குழிகள் 'நம்' பழங்காலக் கவிஞர்களுக்கு!

நமது புராணிகர்களுக்கோ 'முடிவிலோர்பிடிசாம்பல்' என்ற நிலையாமைத்தத்துவத்தை விளக்கத்தான் பயன்பட்டன!

"காதற்ற ஊசியும் வாராது கடைவழிக்கு ......" என்ற பாடலை கால முழுதும் பாடி தங்கள், வாழ்க்கைக்கு 'முடிவிலோர்—பிடிசாம்பல்' என்று முற்றுப்புள்ளி வைத்துக் கொள்வதிலே பெருமை

(5-பக்கம் பார்க்க)

ickavachagam alias Kanchi Manimoliyar
adras. Joint Editor, M. Ilancheliyan B. A. (Hons